
பெண்களும் மூடநம்பிக்கையும்

# சகுனம்



எஸ்.எச்.எம். இஸ்மாயில் ஸலபி

உடதலவின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

வெளியீட்டெண் - 09

# பெண்களும் மூடநம்பிக்கையும்

# சகுனம்

With Best Compliments From:
JAM-E-ATHU ANSARIS SUNNATHIL MOHAMMADIYYA
PARAGAHADENIYA - KU/WEUDA
SRI LANKA,

S.H.M.இஸ்மாஈல்,
ஆசிரியர், உண்மை உதயம்.

வெளியீடு:
*Jam-e-athu Ansaris Sunnathil Mohammadiyya,*
*Head Office,*
*Paragahadeniya,*
*Ku / Weuda.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBILIOGRAPHICAL DATA

TITLE OF THE BOOK : PENGALUM MUDANAMBIGGAIYUM -SAHUNAM

AUTHOR : S.H.M. ISMAIL(SALAFI)

DATE OF PUBLICATON : 9th MAY, 1998

PUBLISHERS : J.A.S.M,
PARAGAHADENIYA,
WE-UDA,

COPY RIGHT : AUTHOR

TYPESETTING : JASM COMPUTER CENTRE

PRINTED AT : A.J. PRINTS

No OF COPIES : 3500

PRICE : 10.00

## DISTRIBUTORS

**JAM-E-ATHU ANSARIS SUNNATHIL MUHAMMADIYYA,**
HEAD OFFICE
PARAGAHADENIYA,
WE-UDA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன். அகிலங்களின் இரட்சகனுக்கே அனைத்துப் புகழும். உத்தமத் திருநபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்தம் நல்லறத் தோழர்கள், இல்லத்தரசிகள், உற்ற உறவினர், அவர் வழி நடந்த, நடக்கும் மற்ற அனைவர்மீதும் ஸலாமும் ஸலவாத்தும் என்றென்றும் உண்டாவதாக.

இஸ்லாம் ஈமான், அமலுஸ் ஸாலிஹாத் என்ற இரண்டையும் ஒன்றிணைத்து நோக்கும் மார்க்கமாகும். ஈமானற்ற அமல் அர்த்தமற்றது. அமல் அற்ற ஈமான் கனியற்ற மரம் போன்றது.

நடத்தை (அமல்) சார்ந்த விடயங்களில் ஏவல், விலக்கல் இருப்பது போன்றே நம்பிக்கை (ஈமான்) சார்ந்த விடயங்களிலும் ஏவல், விலக்கல்கள் உள்ளன.

இஸ்லாம் நம்பக் கூறும் அல்லாஹ், மலக்குகள், வேதங்கள், இறைத் தூதர்கள், கலாகத்ர் மறுமை போன்றவற்றை நம்ப மறுப்பதும் நம்பக் கூடாது எனக் கூறும் மூட நம்பிக்கைகளை நம்புவதும் மிகப் பெரும் பாவமாகும்.

சில வேளை சில நம்பிக்கைகள் ஹராமான தடுக்கப்பட்ட காரியங்களைச் செய்வதைவிட இஸ்லாத்தின் நோக்கில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகக்கூட இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இஸ்லாம் தடுத்த அர்த்தமற்ற நம்பிக்கைகளை இனங்கண்டு அவற்றை எமது உள்ளத்திலிருந்து முற்று முழுதாக அகற்றிவிடுதல் அவசியமாகும்.

இவ்வகையில் எமது ஜம்இய்யாவில் பணிபுரியும் பிரச்சாகரும் உண்மை உதய இஸ்லாமிய இதழின் ஆசிரியருமான S.H.M.இஸ்மாஈல் ஸலபி அவர்களின் சகுனம் பற்றிய இச்சிறு நூலை வெளியிடத் தீர்மானித்தோம்.

இந்நூலை வாங்கி வாசிப்பதுடன் மேற்படி தவறான நம்பிக்கைகளில் மூழ்கியுள்ளோர்களுக்கு அன்பளிப்புச் செய்வதன் மூலம் அவர்களையும் இத்தவறான நம்பிக்கையிலிருந்து பாதுகாக்க அனைவரும் முயல வேண்டும்.

இந்நன் முயற்சியை அல்லாஹுத்தஆலா அங்கீகரித்து அருள்புரிய வேண்டும் என்றும், இதன்மூலம் அறியாமையால் மூடக்கொள்கையில் மூழ்கியுள்ள முஸ்லிம் சமூகம் அதிலிருந்து விடுபடவேண்டும் என்றும் பிரார்த்தித்து விடை பெறுகின்றேன்.

இவ்வண்ணம்,
அஷ்ஷெய்க் N.P.M. அபூபக்கர் சித்தீக் மதனி.

அமீர்,
ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா,
பறகஹதெனிய,

வேஉட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன். அல்லாஹவுக்கே அனைத்துப் புகழும். அவன் திருத்தூதர் மீதும் அவர் வழி வாழ்ந்த - வாழ்வோர் அனைவர் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் என்றென்றும் உண்டாவதாக!

இஸ்லாம் சிந்திக்கத் தூண்டும் மார்க்கமாகும். அது எல்லாவிதமான அறியாமைச் சிந்தனைகளையும் எதிர்க்கின்றது. அதனுடைய போதனைகள், மூட நம்பிக்கைகள், நடத்தைகள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பவற்றை வேரறுக்கும் தன்மை கொண்டதாகும்.

"சிந்தியுங்கள், ஆராயுங்கள்" என அடிக்கடி போதிக்கும் அருள் மறையை ஏற்றுள்ள முஸ்லிம் சமூகத்தில் சிந்தனையை மழுங்கடிக்கச் செய்யும் அறியாமைக் கோட்பாடுகள் எப்படியோ இடம் பிடித்துள்ளன. இவற்றைக் களைவதற்காக மார்க்க அறிஞர்கள் குழுக்களாகவும், தனிப்பட்ட முறையிலும் முயற்சித்து வருகின்றனர். அதன் தொடரில் இது ஒரு சிறு முயற்சியாகும்.

இந் நூல் சகுனத்தைப் பற்றிப் பேசினாலும் "பெண்களும் மூடநம்பிக்கையும் - சகுனம்" எனப் பெயரிட்டுள்ளேன்.

பெண்களிடமே இத்தகைய சிந்தனைகள் அதிகமாகக் காணப்படுவதும், இந் நூல் பெண்களிடம் அதிகமாகச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணமுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெயருக்குக் காரணமாகும்.

வாசிப்புப் பழக்கமுள்ள பெண்கள் பலரும் கூட தம்முடன் சம்பந்தப்பட்ட நூற்களை மட்டுமே வாசிக்கும் போக்குடையோராகக் காணப்படுவதனாலேயே நூலின் பெயரில் பெண்களையும் சேர்க்க நேரிட்டது. இல்லையெனில் வெறுமனே மூட நம்பிக்கைகள் எனத் தலைப்பிட்டி–ருக்கலாம்.

மூடநம்பிக்கைகளை இனம் காட்டுவதில் இது முதல் கட்ட நூல் மட்டுமே. இன்ஷா அல்லாஹ் தொடர்ந்தும் இது போன்ற சிறு சிறு நூற்கள் மூலம் மூடநம்பிக்கைகள் அல்குர்ஆன், ஹதீஸ் ஒளியில் இனம்காட்டப்படும். (இன்ஷா அல்லாஹ்).

வழமைபோல் இந்நூலை வெளியிடுகின்ற ஜம்இய்யாவுக்கும்; மதிப்புரை நல்கிய அமீர் அஷ்ஷெய்க் N.P.M.அபூபக்கர் சித்தீக் மதனி அவர்களுக்கும், ஆலோசனைகள் வழங்கிய செயலாளர் A.L.கலீலுர் ரஹ்மான் B.A., அவர்களுக்கும் "புரூப்" திருத்துவதில் ஒத்துழைப்பு வழங்கிய S.S.றமழான் ஸலபி அவர்களுக்கும், "கம்பியூட்டர் டைப் செட்டிங்" செய்த M.M.M.றிழ்வான், M.H.றாசிக்கீன் ஆகியோருக்குக் இதனை அழகுற அச்சிட்ட A.J. அச்சகத்தாருக்கும் என் நூற்களை ஆர்வமுடன் வாங்கிப் படிக்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் என் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

இவ்வண்ணம்,

**S.H.M.** இஸ்மாஈல் ஸலபி

09-05-1998.

59/B, கலதெனிய,
உடதலவின்னஇ மடிகே,
கடுகஸ்தோட்ட, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் மூட நம்பிக்கையும்

பொதுவாக மூட நம்பிக்கைகள் பல்வேறு சமூகங்களிலும் ஊடுருவியுள்ளதை அவதானிக்கலாம். இஸ்லாம் சந்தித்த ஜாஹிலிய்யச் சமூகத்திலும் பல்வேறுபட்ட மூட நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள், அறியாமை நம்பிக்கைகள், நடத்தைகள் மலிந்திருந்தன. இஸ்லாம் இவை அனைத்துக்குமெதிராக ஒரு ஈமானிய, அறிவியல் போராட்டத்தை நடாத்தி அத்தனையையும் அழித்தொழித்தது.

இருப்பினும் முஸ்லிம்கள் குர்ஆன் ஹதீஸை விட்டும் விலகிச் சென்றமை, மார்க்க அறிஞர்கள் சமூகத்தை சார்ந்து செல்ல வேண்டுமென்பதால் சத்தியத்தைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறாமை, மாற்று மதத்தவர்களுடன் முஸ்லிம்கள் சேர்ந்து வாழ நேரிட்டமை போன்ற பல்வேறு காரணங்களால் முஸ்லிம் சமூகத்திலும் மூட நம்பிக்கைகள் ஊடுருவி இறை நம்பிக்கையை விட ஆதிக்கம் செலுத்துமளவுக்கு ஆழமான இடத்தைப் பிடித்துள்ளன.

இத்தகைய மூட நம்பிக்கைகளில் பல ஆண்களிடம் காணப்பட்டாலும் பெண்களிடமே அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பொதுவாக பெண்களிடம் மார்க்க அறிவு குறைவாகக் காணப்படுவது இதற்கொரு காரணம் எனலாம். பள்ளியில் நடக்கும் பயான் நிகழ்ச்சிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்பாக்கள், மார்க்க விளக்க வகுப்புக்கள், ஹதீஸ் மஜ்லிசுகள், இஜ்திமாக்கள், கருத்தரங்குகள் என்பன பெரும்பாலும் ஆண்களுக்கு மட்டுமே பயனளிக்கும் விதமாக அமைந்துள்ளன. பெண்களுக்கென இருந்தாற்போல் ஏதேனும் பயான்கள் நடந்தால் கூட அவை குறித்த சில விடயங்களுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையையும் காணலாம். இது போன்ற காரணங்களால் பெண்களிடம் மார்க்க அறிவில் குறைவு காணப்படுகின்றன. அதனால் அவர்கள் கூடுதலாக மூடநம்பிக்கைகளின் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

அடுத்து பெண்களிடம் அதிகமாக தேடிக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. ஏதோ தமக்குத் தேவையான தொழுகை, சுத்தம் போன்றவற்றை அறிந்தால் போதும் என்றவாறு நடந்து கொள்கின்றனர். தற்போது பத்திரிகைகள், நாவல்கள் வாசிப்பதில் காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதி கூட மார்க்க நூல்களைப் படிப்பதில் காட்டுவதில்லை. பெண்களிடம் காணப்படும் வாசிப்புப் பழக்கமின்மையும் அவர்களிடம் அதிக மூடநம்பிக்கைகள் ஊடுருவக் காரணமாயுள்ளது எனலாம்.

அடுத்து பெரும்பாலும் மூடநம்பிக்கைகளின் ஏகபோக விநியோகத்தர்களாக முதியவர்கள், மூதாட்டிகள், காணப்படுகின்றனர். ஒரு வீட்டில் இருக்கும் தாத்தா, பாட்டி என்போருக்குப் பணிவிடை செய்பவர்களாகவும், அவர்களுடன் அதிக நேரத்தைக் கழிப்பவர்களாகவும் பெண் பிள்ளைகளே இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பிள்ளைகளுக்கு இந்த நெருக்கம் இல்லை. எனவே மூடநம்பிக்கைகளால் அதிகம் பாதிக்கப்பட்ட முதியோர்களுடன் அதிக சகவாசம் கொள்ளும் பெண்கள் அவர்களின் தாக்கத்திற்குள்ளாகின்றனர். இப்படித் தாக்கத்திற்குட்பட்ட பெண் பிள்ளைகள் எதிர்கால மூடநம்பிக்கை வினியோகஸ்தர்களாகி விடுகின்றனர். இதுவும் பெண்களிடம், ஆண்களிடம் காணப்படுவதை விடக் கூடுதலாக மூட நம்பிக்கைகள் காணப்படுவதற்கு முக்கியமானதொரு காரணமாகும்.

இவ்வாறு பல்வேறு காரணங்களால் பெண்களிடம் மூட நம்பிக்கைகள் அதிகம் இடம் பிடித்துள்ளன. இந்த நம்பிக்கைகளில் அநேகமானவை ஈமானுக்கு வேட்டு வைப்பவை. காலத்தையும், பணத்தையும் விரயமாக்குபவை. இவற்றைப் பற்றி எச்சரிக்கை செய்து இந்நம்பிக்கைகளால் பாதிக்கப்பட்டோரைப் பாதுகாப்பது கடமையாகும்.

பள்ளிகளில் பணிபுரியும் ஆலிம்கள், தப்லீக் (பிரச்சாரப்) பணியில் ஈடுபடும் இஸ்லாமிய அமைப்புக்கள் இதில் கவனம் செலுத்துவது கட்டாயமாகும். இதனை உணர்ந்து ஆலிம்களும், ஜமாஅத்துக்களும் செயல்படுவது அவசியமாகும்.

❀❀❀❀❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுனம்

இஸ்லாம் என்பது சில வணக்க வழிபாடுகளின் கூட்டுத் தொகுப்போ, சடங்கு சம்பிரதாயங்களின் வடிவமோ அல்ல. இப்படித்தான் வணங்க வேண்டும் என ஏவிவிட்டு, இல்லறம், பொருளாதாரம், அரசியல் போன்ற பொது விடயங்கள், வாழ்க்கை வழிமுறைகள் பற்றியெல்லாம் மாற்றானிடம் கொள்கைப் பிச்சை கேட்கும் நிலையில் இஸ்லாம் முஸ்லிம்களை விட்டு வைக்கவில்லை.

வாழ்வின் அனைத்துத் துறை பற்றியும் மயக்கம் எதுவுமின்றிப் பூரண தெளிவை ஏற்படுத்தும் அறிவுபூர்வமான கொள்கைகளையும், வணக்க வழிமுறைகளையும் வாழ்க்கை நெறிமுறைகளையும், ஒழுக்க விதிமுறைகளையும் போதிக்கும் தூய மார்க்கமே இஸ்லாமாகும்.

அறிவியலுக்கு வித்திட்டு அறியாமையை ஒழித்துக்கட்டிய இஸ்லாத்தைத் தமது மார்க்க நெறியாக ஏற்றுள்ள முஸ்லிம்களுக்குள்ளேயே மூடக் கொள்கைகள் எப்படியோ இடம்பிடித்துவிட்டன. மாற்றாரிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, அறிவுக்கும், இஸ்லாமிய அகீதாவுக்கும் முரண்பட்ட சடங்கு, சம்பிரதாய நம்பிக்கைகள் சமயச் சட்டங்களைவிட சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் சகுனம் பார்ப்பதாகும். இந்துக்கள் ஏதேனும் நல்ல காரியமொன்று செய்வதற்கு முன்னால் முகூர்த்தம் பார்ப்பது வழமை. அது அவர்களது கலாச்சாரம். நல்ல நேரத்தைக் கண்டு சுப முகூர்த்தத்தில் ஆரம்பிக்கப்படும் வியாபாரம், வீடு கட்டுதல், திருமணம் போன்றவை நன்மை பயக்கும் என்பதும், முகூர்த்தம் பார்க்காமல் ஆரம்பிக்கப்படும் காரியங்களின் முடிவு கஷ்டத்தையும் துயரத்தையும் ஏற்படுத்திவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை.

இந்த நம்பிக்கை எவ்வித வித்தியாசமுமின்றி முஸ்லிம்களிடமும் இடம்பிடித்து விட்டது. இஸ்லாத்தைத் தமது வழிகாட்டியாக ஏற்றுள்ளவர்களும் கூட நாளிலும் நேரத்திலும் நல்லது கெட்டது இருப்பதாக நம்புகின்றனர். சனிக்கிழமை சனியன் பிடித்தது அது கெட்ட நாள் என்று விளக்கவுரை வழங்குவர். ஒடுக்கத்துப் புதனை பீடைக்குரிய நாளாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறே மாதத்திலும் நல்ல மாதம் கெட்ட மாதம் என்றெல்லாம் பேதம் போதிப்பர். ஸபர் மாதத்தில் மறதியாகவேனும் நல்லதைச் செய்துவிடக் கூடாது என்பதில் கரிசனையாயிருப்பர்.

சில நேரங்களில் சில காரியங்களைச் செய்யக் கூடாதென கட்டுப்பாடும் விதிப்பர். இரவில் கூட்டிய குப்பையை வெளியில் கொட்டக் கூடாதென்பர். இரவு நேரத்தில் ரொட்டிஓட்டை முன்வாசல் வழியாக வெளியில் கொண்டு செல்லக் கூடாது அவ்வாறு வெளியில் கொண்டு செல்ல வேண்டுமானால் பின்வாசல் வழியாகக் கொண்டு செல்ல வேண்டுமென்பர்.

இரவு வேளைகளில் அவசரத் தேவைக்குத்—தானும் ஊசி, முட்டை, கடனுக்குப் பணம் போன்ற—வற்றைக் கேட்டால், கிடைக்கவே கிடைக்காது. காரணம் கேட்டால் "கூடாது" என்பர். விளக்கத்துக்காக ஏன் கூடாது என்று திருப்பிக் கேட்டாலும் கூடாது என்ற வார்த்தையைத் தவிர வேறெந்த பதிலையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறே அஃறிணைகளின் அலறல்களுக்குக் கூட அர்த்தம் கற்பிப்பர். இரவில் ஆந்தை அலறினால் ஆபத்து என்பர். காகம் கரைந்தால் யாரேனும் விருந்துக்கு வருவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முன்னறிவிப்புச் செய்வதாகக் கூறுவர். பேசும் போது பல்லி கத்தினால் (ஏதோ பல்லியின் பாஷையை அறிந்தவர் போல) தாம் பேசுவது உண்மை என பல்லி கூறுவதாக விளக்கமளிப்பர்.

தற்செயலாக இடம்பெறும் சில நடவடிக்கைகள் கூட தம்மில் பாதிப்பை ஏற்படுத்துவதாக இவர்கள் நம்புவர். வீட்டிலிருந்து வெளியிலிறங்கிச் செல்லும் போது பூனை குறுக்கால் போனால் வெற்றுக் குடத்துடன் யாரேனும் தென்பட்டால், மரணத்தின் மூலம் கணவனை இழந்த பெண்ணொருத்தி எதிராக வந்தால் தொட்ட காரியம் கெட்டுவிடுமென நம்பி அதனைக் கைவிட்டுவிடுவர். மளிகைச் சாமான்கள் கூட தமக்கு வரும் தீங்கை அகற்றும் என இவர்கள் நம்பத் தயங்கமாட்டார்கள். மஞ்சள் கலந்த நீரைத் தெளிக்காமல் கடை திறக்கமாட்டார்கள். மஞ்சள் திருஷ்டி கழிக்கும் என நம்பி அதனைக் கொண்டு மணமக்களை ஆராத்துவார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் அல்லாஹ்வே அனைத்துச் சக்திகளையும் தன்வசம் வைத்திருப்பவன் என தாம் நம்புவதாகத் தம்பட்டம் வேறு அடிப்பர். இந்த நம்பிக்கைகளுக்கு இறைமறையிலோ நபி வழியிலோ ஆதாரமெதுவும் உண்டா? இல்லை இல்லவே இல்லை. அத்தனையும் அன்னியர்களின் இரவல் சரக்குகள். திட்டமிட்ட திணிப்புக்கள். கண்மூடிப் பின்பற்றிய நடைமுறைகள்.

நல்ல, கெட்ட நேரங்கள் பற்றிய நம்பிக்கைக்கும், பூனை குறுக்கிட்டால் தொட்ட காரியம் கெட்டுவிடும் என்பன போன்ற அபசகுன கருத்துக்களுக்கும் அல்லாஹ் அல்லாதவைகளாலும் எமக்கு ஏதேனும் நன்மையோ, தீமையோ செய்திட முடியும், அதே போல் எமக்கு வர இருக்கும் நல்லதையோ தீயதையோ தடுத்துவிடும் ஆற்றலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் அல்லாதவை-களுக்குண்டு என்ற தவறானதொரு எண்ணம் இவர்களது அடிமனதில் ஆழப்பதிந்திருப்பதே அடிப்படைக் காரணமாகும்.

எனவே சகுனம் பற்றி விபரிக்க முன்னர் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள "அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் நமக்கு நன்மை எதனையும் செய்திட முடியுமா? அல்லது அல்லாஹ் நாடிய தீங்கை அவனன்றி வேறெந்த சக்தியாலும் தடுத்திட முடியுமா? நல்லதையோ, தீயதையோ செய்திடவும், தடுத்திடவும் சக்தி பெற்ற அல்லாஹ்வைத் தவிர வேறெவராவது இருக்கின்றனரா? என்பது பற்றி ஆராய்தல் அவசியமாகும்.

ஏற்கனவே நாம் குறித்துக் காட்டிய சகுன நம்பிக்கைகள் நாம் ஈமான் கொள்ள வேண்டிய அடிப்படை ஆறு அம்சங்களில் ஒன்றான வல் கத்ரிகைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹுத்தஆலா நன்மை தீமை அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே நிகழும் என்ற கத்ரை ஏற்றல் எனும் இஸ்லாமிய நம்பிக்கைக்கு நேர்மாற்றமானதாகும். ஏனெனில் பூனை குறுக்கால் போனதால் தீங்குவரும் என்றோ மஞ்சள் நீரால் வர இருக்கும் தீங்கு தடைப்படும் என்றோ நம்புவது இவற்றுக்கு அல்லாஹ் நாடியதை மாற்றும் சக்தி உண்டு என்று நம்புவதையே குறித்து நிற்கிறது.

அல்லாஹ் நாடிய நன்மையொன்றைத் தடுத்து நிறுத்திடவோ அல்லது அவன் நாடிய ஒரு தீமையை அகற்றிவிடவோ எவராலும் எந்தச் சக்தியாலும் முடியாது. இதனைப் பல இறைமறை வசனங்களும் நபிமொழிகளும் உணர்த்துகின்றன.

"அல்லாஹ் உங்களுக்கு யாதொரு தீமை செய்ய நாடினாலும் அல்லது அவன் உங்களுக்கு யாதொரு நன்மை செய்திட நாடினாலும் (அதில்) எதனையுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை எதிர்த்து தடுத்து நிறுத்தக் கூடியவன் யார்? (ஒருவரும்) இல்லை. நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருந்துகொண்டிருக்கிறான். (48:11)

"அல்லாஹ் உமக்கு யாதொரு தீங்கிழைத்தால் அதனை நீக்குவோன் அவனையன்றி வேறொருவனுமில்லை. (அவ்வாறே) உமக்கு யாதொரு நன்மை நேரிடினும் (அதைத் தடுக்கக் கூடியவன் எவனுமில்லை) அவன் யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்." (6:17)

இதே கருத்தை 10:107, 39:38 போன்ற வசனங்களும் உறுதி செய்கின்றன.

நாள், நேரங்களில் நல்லது, கெட்டது ஏற்படும் என்றோ சில பறவைகளின் அலறல்கள், சில மிருகங்களின் நடமாட்டங்கள் போன்றவற்றால் நன்மை அல்லது தீமை விளையும் எனறோ நம்புவது இறை நம்பிக்கைக்கு எதிரானவையாகும். "நன்மையாயினும், தீமையாயினும் யாவும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறும்" என்பதை மேற்கண்ட மறை வசனங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. அல்லாஹ் சிலை வணக்கத்தைக் கண்டிக்கும் போது கூட

"அவைகளால் உங்களுக்கு நன்மை செய்யவோ தீமை செய்யவோ முடியாது. அவ்வாறே வரவிருக்கும் நன்மையையோ, தீமையையோ தடுத்திடவும் முடியாது"

என்ற கருத்தை முன்வைத்தே பல இடங்களில் இடித்துக் காட்டுகிறான். (பார்க்க: 5:74, 6:71, 10:18,106, 21:66, 22:12, 6, 25:3, 55, 26:73)

நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னாலும் ஓதுகின்ற திக்ருகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

اللهم لامانع لما اعطيت ولامعطي لما منعت

ولاينفع ذا الجد منك الجد.

என்று ஓதுபவர்களாக இருந்தார்கள்.

பொருள :–அல்லாஹ்வே நீ கொடுத்ததை எவராலும் தடுக்க முடியாது. நீ தடுத்ததை எவராலும் கொடுத்திடவும் முடியாது. வெற்றி உன்னிடம் இருக்கும் போது (வெற்றிக்காக முயற்சிக்கும்) எவருடைய முயற்சியும் பயனளிக்காது.

**ஆதாரம் : புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி, நஸாஈ**

"அல்லாஹ்வையன்றி எவராலும் எதனாலும் நல்லதையோ கெட்டதையோ செய்திடவும் முடியாது, தடுத்திடவும் முடியாது" என்பதை மேற்கண்ட துஆ தெளிவுபடுத்துகிறது. இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களைப் பார்த்து நபி(ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் வார்த்தைகள் இதை இன்னும் சற்று வலுப்படுத்துவதை அவதானிக்கலாம்.

"ஒரு நாள் நான் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். அவ்வேளை அவர்கள் என்னை நோக்கி, இளைஞனே! நான் சில அறிவுரைகளைக் கற்றுத் தருகிறேன்" என்று கூறிவிட்டு

நீ அல்லாஹ்வை மனதிற்கொள் ! அவன் உன்னைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை மனதில் கொள் ! நீ அவனை முன்னால் காண்பாய்! நீ இறைஞ்சும் போது அல்லாஹ்விடமே இறைஞ்சு நீ உதவி தேடுவதானால் உனதிறைவனிடமே உதவி தேடு! இந்த உலகமே ஒன்று திரண்டு வந்து உனக்கு ஏதாவது நன்மை செய்திட முயன்றாலும் உனக்கு ஏற்கனவே அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ளதைக் காட்டிலும் அதிகமாக எந்த நன்மையையும் அவர்களால் செய்திட முடியாது. இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வந்து தீங்கு எதனையும் செய்திட முயன்றாலும், ஏற்கனவே அல்லாஹ் குறித்து வைத்ததைக் கொண்டல்லாமல் அவர்களால் எந்தக் கெடுதலையும் செய்திட முடியாது (உனக்கு உரியவற்றை) விதிப்பதற்கான எழுது கோல்கள் உயர்த்தப்பட்டுவிட்டன. எழுதப்பட்ட பக்கங்கள் உலர்ந்தும் விட்டன எனக் கூறினார்கள்.

நூல் : திர்மிதி

இந்த ஹதீஸைப் படிப்பவர்கள் கண்மூடித்தனமாக முயற்சிகளை முடங்கச் செய்துவிட்டு போலித் "தவக்குல்" செய்ய வேண்டும் என நாம் கூறுவதாகவும் எண்ணிவிடலாகாது. எமது முயற்சியின் காரணமாக நல்லவற்றையும், தப்பு தவறுகளைக் காரணமாகக் கொண்டு தண்டனைகளையும் அல்லாஹ் தர முடியும்.

ஆனால் எவ்வித காரணமுமின்றி மாயமான சக்தி ஒன்று நமக்கு வரவிருக்கும் நல்லதைத் தடுத்து தீமையைச் செய்திடவோ அல்லது தீங்கைத் தடுத்து நல்லதைச் செய்திடவோ முடியாது. அவ்விதம் நம்புவது இணைவைத்தலாகும். இதனைக் கருத்திற் கொண்டு சகுனம் பற்றி அலசுவோம்.

அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும், எதனாலும் எமக்கு வரவிருக்கும் நல்லதைத் தடுத்திட முடியாது எனும்போது பூனை குறுக்கிட்டதால் தொட்ட காரியத்தில் முஸீபத்து வந்துவிடும் என நம்பலாமா? இது ஈமானுக்கு முரணில்லையா? வெற்றுக்குடத்துடன் யாரேனும் முன்வந்தால் "பலாய்" பிடித்துவிடும் எனப் பதைபதைக்கலாமா? இந்தத் தவறான நம்பிக்கையால் பகைமை கொண்ட குடும்பங்கள், அண்டை அயலவர்கள் தான் எத்தனை பேர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே மஞ்சள் கண்ணூறு, திருஷ்டி போன்றவற்றை அகற்றுமென்றும் சாம்பிராணியும் சந்தனக் குச்சியும் நன்மை நல்குமென்றும் ஏகத்துவத்தை உணர்ந்த ஒருவன் நம்புவானா?

இரவில் முட்டை, ஊசி போன்றவற்றை இரவல் கொடுப்பதனாலும் கடன் கொடுத்து உதவுவதனாலும் தீங்கு நேரிடும், குப்பையை வெளியில் கொட்டினால் பரக்கத் பறந்துவிடும் என்றெல்லாம் எண்ணலாமா?

சாதாரணமான மேற்படி செயல்களால் வரவிருக்கும் நன்மைகளைத் தடுக்க முடியும் என்றும், மஞ்சள், சாம்பிராணி போன்றவற்றுக்குத் தீங்கை அகற்றும் ஆற்றல் இருப்பதாகவும் நம்புவது இணைவைத்தல் ஆகாதா? அல்லாஹ்வின் வேலையை சாதாரண மஞ்சள் செய்வதாக நம்புவது எவ்வளவு மட்டரகமான கொள்கை என்பதையாவது சிந்தித்துப் பார்க்கக்கூடாதா?

ஊசி, முட்டை, கடன் என்பவற்றை இரவில் கொடுக்கக் கூடாது என்ற மூடநம்பிக்கை எத்தனை குடும்பங்களில் விரோதத் தீயை விதைத்திருக்குமென்று சற்று எண்ணிப் பாருங்கள்.

இரவில் ஊசி, முட்டை, கடன் என்பவற்றைக் கோருவோர் தமது அண்டை வீட்டாரிடத்திலேதான் இவற்றைக் கோருவர். அதிலும் திடீர் விருந்தினர் வருகை, திடீர் சுகயீனம் போன்ற அவசியத் தேவைகளின் நிமித்தமே இரவில் கடன், முட்டை என்பவற்றைக் கோருவர். இவ்வேளையில் அவசியம் உதவவேண்டிய அண்டை வீட்டான் பணம், முட்டை என்பன இருந்தும் இல்லை எனக் கூறிவிட்டால் கேட்டவன் மனது என்ன பாடுபடும். எனக்கும் ஒரு நேரம் வரும் அப்போது பார்த்துக்கொள்கிறேன் என்ற பழிவாங்கும் உணர்வு அவன் உள்ளத்தில் உருவாகுமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தவறான நம்பிக்கை முஸ்லிம்களிடையே இருக்கும் இறுக்கமான உறவுகளை உடைத்தெறிவதற்காகத் திணிக்கப்பட்ட ஒன்றாக இருக்குமோ என்றுகூடச் சந்தேகிக்கவேண்டியுள்ளது.

"தங்கள் தொழுகையில் பராமுகமாயிருக்கும் தொழுகையாளிகளுக்குக் கேடுதான்! அவர்கள் மக்களுக்குக் காண்பிக்கவே தொழுவார்கள், (ஊசிபோன்ற) அற்பப் பொருட்களையும் (இரவல் கொடுக்காது) தடுத்துக்கொள்வார்கள். (இவர்களுக்கும் கேடுதான்).

(107:4-7).

அற்பப் பொருட்களைக்கூட இரவல் கொடுக்காதவர்களுக்குக் கேடுதான் என அல்லாஹ் கூற, அதற்கு மாற்றமாக "இல்லை இல்லை! அற்பப் பொருட்களை (ஊசி) இரவல் கொடுப்பவர்களுக்குத்தான் கேடுண்டாகும்" என அல்லாஹ் கூறியதை மறுத்துக் கூறும் விதத்திலல்லவா இம்மூடநம்மபிக்கை அமைந்துள்ளது.

இந்துக்கள் வீடு கட்டுதல், திருமணம் நடத்துதல், புது மனை புகுதல் போன்றவைகளைச் செய்வதற்கு முன்னர் நாள் நட்சத்திரம் பார்ப்பர். முஸ்லிம்களிள் பலரும் இதனைட் பின்பற்றி "நல்ல நேரம் பார்த்தல்" என்ற மூடநம்பிக்கையில் மூழ்கியுள்ளனர்! (நல்ல நாள் என லெப்பை குறித்துக் கொடுக்கும் தினம் சிலவேளை மணமகள் இல்லறத்தில் ஈடுபடத் தகுதியற்ற நிலையில் இருக்கும் நாளாகக்கூட இருப்பதுண்டு. இதனால் ஆயிரம் கனவுகளுடன் இல்லறச் சோலையில் காலடி எடுத்து வைக்கும் மணமகன் முதல் நாளிலேயே முகம் சுளிக்கும் நிகழ்ச்சிகளும் நடப்பதுண்டு!)

இவ்வாறு நாள், நட்சத்திரம், நல்ல நாள், நேரம் பார்ப்பது இஸ்லாம் கூறும் ஏகத்துவக் கோட்பாட்டுக்கு எதிரானதாகும். இந்தக் காரியத்தை இந்தத் தினத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாளில், இந்த மாதத்தில் செய்தால் நல்லது நடக்கும். இஃதல்லாத தினத்தில் செய்தால் தீயது நடக்கும் என நன்மையையோ தீமையையோ ஏற்படுத்தும் அல்லாஹ்வின் அதிகாரத்தை நாளுக்கும் மாதத்துக்கும் வழங்குவது எப்படி இஸ்லாமிய அகீதாவுக்கு ஒத்துப்போகும்? இஸ்லாமிய அகீதாவுக்கு மட்டுமன்றி நடைமுறைக்கும் பகுத்தறிவுக்கும்கூட இது முரணானதாகும்.

நாள் நட்சத்திரம் பார்த்து சுப முகூர்த்தத்தில்(?) செய்யப்படும் எத்தனையோ திருமணங்கள் மணமுறிவில் முடிவதில்லையா? நல்ல நாளில் ஆரம்பித்த எத்தனையோ வியாபாரங்கள் கையைக் கடிப்பதில்லையா? இதிலிருந்து நல்ல நேரம்(?) பார்த்துச் செய்வதால் நல்லது நடக்கும் என்று கூறுவது பொய் என்பது புலனாகின்றதல்லவா? அன்றைய அரபிகள் ஏதேனும் பயணம் செய்வதற்கு முன்னர் ஒரு பறவையைப் பிடித்து அதனைத் தூர எறிவர். அது வலப்புறமாகப் பறந்து சென்றால் அதனை நல்ல சகுனமாக ஏற்பர். இடப்புறமாகப் பறந்து சென்றால் அதனைத் துர்ச்சகுனமாக மதித்துப் பயணத்தைக் கைவிடுவர். இஸ்லாம் இந்த மூட நம்பிக்கையை வண்மையாகக் கண்டித்தது.

நோய் (தானாகத்) தொற்றுவதில்லை. கெட்ட சகுனம், ஆந்தை அலறுவதால் பீடை, சபர் மாத (ஒடுக்கத்துப் புதன்) பீடை, நட்சத்திர சாஸ்திரம், பேய் (பிசாசு, மோகினி) என்பன (இல்லவே) இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரழி)

ஆதாரம் : திர்மிதி, அபூதாவூத;(3893, 3894,5)

சகுனம் என்பது இல்லை என்ற கருத்தைத் தரும் நபிமொழிகள் பலவற்றை இப்னுமாஜா 3536, 3537, 3039 என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கங்களிலும் அபூதாவூதில் இரண்டாம் பாகத்திலும் "கிதாபுத் திப்பு" எனும் பகுதியில் "சகுனம்" என்ற தலைப்பிலும் காணலாம். இவ்வாறே புகாரி, முஸ்லிம், அஹ்மத் போன்ற ஹதீஸ் கிரந்தங்களிலும் சகுனத்தை மறுத்துப் பேசும் பல்வேறு நபி மொழிகளைக் காணலாம்.

சகுனம் சரியில்லை எனத் தொட்ட காரியத்தை விட்டு விடுவது அல்லாஹ்வுக்கு இருக்கும் நன்மை, தீமை ஏற்படுத்தும் சக்தி காலத்துக்குமிருக்கிறது என்ற எண்ணத்தின் அடிப்படையில் நிகழ்வதால் அது ஷிர்க்கை ஏற்படுத்துகின்றது.

இது பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறும் போது சகுனம் இணையாகும், சகுனம் ஷிர்க்காகும், சகுனம் ஷிர்க்காகும் என மூன்று முறை கூறிவிட்டு எங்களில் பல்ருக்குக் கூட அது உள்ளத்தில் உறுத்தலை ஏற்படுத்தலாம். எனினும் தவக்குலின் மூலம் அல்லாஹ் அதனை அகற்றிவிடுவான் என்றார்கள்.

(அபூதாவூத் 3892, இப்னுமாஜா 3538)

தவக்குலின் மூலம் நீக்குதல் என்றால் என்ன என்பதை பின்வரும் நபிமொழி மூலம் நாம் உணரலாம்.

நபி(ஸல்) அவர்களிடம் சகுனம் பற்றிப் பேசப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள் சகுனத்தில் நல்லது ப∴ல் (எனும் நல்லதைக் கூறுவது) ஆகும். சகுனம் சரியில்லை என்ற எண்ணம் ஒரு முஸ்லிமைத் தனது காரியத்திலிருந்து திருப்பிவிடாதிருக்கட்டும். உங்களில் எவரேனும் தான் வெறுக்கும் எதையேனும் கண்டுவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

اللهم لا يأتي بالحسنات الا أنت ولا يدفع السيئات الا أنت ولا حول ولا قوة الا بك

எனக் கூறுவானாக என்றார்கள்.

(அபூதாவூத் – 3900)

பொருள: அல்லாஹ்வே உன்னையன்றி, யாரேனும் நல்லவற்றை அளித்துவிட முடியாது, உன்னைத் தவிர வேறு எவராலும் தீங்குகளைத் தடுத்துவிடவும் முடியாது, உன்னைக் கொண்டேயன்றி எந்தச் சக்தியும் முயற்சியும் இல்லை.

இந்நபிமொழிப் படி நாம் ஒன்றைச் செய்யத் தொடங்கும் போது நாம் நல்லது அல்ல எனக் கருதும் எதையேனும் கண்டால் எமது பணியை விட்டுவிடாது மேற்படி துஆவை ஓதி விட்டு பணியைத் தொடருதல் வேண்டும்.

"தனது தேவையை விட்டும் எவரை சகுனம் சரியில்லை என்ற எண்ணம் தடுத்ததோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு இணைவைத்து விட்டார். இது கேட்ட தோழர்கள் இதற்கான பரிகாரம் யாது எனக் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள்

اللهم لا خير الا خيرك ولا طير الا طيرك ولا اله غيرك

எனக் கூறுவதாகும் என்றார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு அம்ரு(ரழி)
ஆதாரம் : அஹ்மத்

பொருள்: உனது நலனைத் தவிர வேறு நலன் இல்லை, உன் சகுனத்தைத் தவிர்ந்த சகுனம் இல்லை. உன்னைத் தவிர வேறு இரட்சகன் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி நபிமொழிகளை ஒன்றிணைத்து நோக்கும் போது "ஒருவர் ஒரு செயலைச் செய்ய நாடுகையில் எசகு பிசகாகக் கெட்ட சகுனம் என மக்களால் கருதப்படச் கூடிய ஏதேனும் நிகழ்ந்து விட்டால் இதனால் தீங்கு வரும் என எண்ணி அக்காரியத்தைக் கைவிட்டுவிலாகாது. அது இணையை உருவாக்கும் என்பதனால்.

இதனால் மனதில் ஏதேனும் சங்கடம் ஏற்படுமெனில் மேற்கூறிய துஆக்களை ஓதி அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து தனது பணியை ஆரம்பித்தல் அவசியமாகும் என்பதையும் அறிய முடியுகின்றது.

மேலே நாம் குறிப்பிட்டவை சந்தர்ப்ப சகுனங்களாகும். இவை மாத்திரமன்றி நாள், மாத சகுனங்களும் உள்ளன. திருமணம், வீடுகட்டுதல், புதுமனை புகுதல் என்பவற்றுக்கு நல்ல நாள் எது எனக் கண்டறிய "லெப்பை" களை மக்கள் நாடுவதைக் காணலாம்.

முழு உலகிலும் நல்லது மாத்திரம் நடக்கும் நல்ல நாளோ, கெட்டது மட்டும் நடக்கும் கெட்ட நாளோ இது வரை வந்ததாக வரலாறு இல்லை. நல்லது தீயது என்பன கலந்து நடக்கும் நாட்களையே இது வரை சந்தித்து வந்துள்ளோம்.

அருகருகாமையில் உள்ள இரு வீடுகளில் ஒரே நாளில் ஒரு வீட்டில் மங்கள நிகழ்ச்சியும் மறு வீட்டில் அமங்கள நிகழ்ச்சியும் நடப்பதைக் கண்கூடாகக் கண்டுவருகின்றோம். எனவே நாட்களில் நல்லது, கெட்டது எனப் பிரித்துப் பார்க்க எதுவுமில்லை.

நல்ல, கெட்ட நேரத்தை அறியும் ஆற்றல் லெப்பைகளிடமிருக்கின்றது என்பது வடிகட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள்தனமாகும். இந்த லெப்பைகளின் வாழ்க்கைத் தரத்தினை சற்று எடை போட்டாலே இவர்களுக்கு இந்த ஆற்றல் இல்லை என்பதை சாதாரண அறிவு படைத்தவனும் அறிந்து கொள்ளலாம். இதை விட்டு விட்டு ஏமாற நாம் உள்ளோம் எனத் தலையை நீட்டினால் ஏமாற்றுபவன் தலையில் மிளகாய் அரைக்காமல் என்ன செய்வான்.?

நாளையும் நேரத்தையும் நல்லது, கெட்டது என வகுப்பது அறிவிற்கு முரணானதும் அல்லாஹ்வைத் திட்டுவதுமாகும். இதனை அல்லாஹ்வே கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

"ஆதத்தின் மகன் என்னை வேதனை செய்கிறான். (எப்படியெனில்) அவன் காலத்தை(க் கெட்டது என)த் திட்டுகிறான். நான் தான் காலமாவேன். (ஏனெனில்) இரவையும் பகலையம் மாறிமாறிவரச் செய்பவன் நானே! (முஸ்லிம்)

மற்றுமொரு அறிவிப்பில்

"நீங்கள் காலத்தைத் திட்டாதீர்கள். ஏனெனில் அல்லாஹ்தான் காலமாவான்."

அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி)

ஆதாரம் : புகாரி

அரபியர்கள் ஜாஹிலிய்யாக் காலத்தில் சில மாதங்களைப் பீடை மாதங்களாக நம்பியிருந்தனர். ஷவ்வால்மாதத்தில் மணமுடிப்பது நல்லதல்ல என்றும் நம்பியிருந்தனர். இந்த நம்பிக்கை தவறானது என்பதை நிருபிக்க ஷவ்வால் மாதத்தில் தான் ஆயிஷா(ரழி). அவர்களை நபி(ஸல்) அவர்கள் மணமுடித்தார்கள். இது பற்றி ஆயிஷா(ரழி) அவர்கள் கூறும் போது

"நபி(ஸல்) என்னை மணமுடித்ததும் ஷவ்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் தான், எனனோடு உறவு கொண்டதும் (மூன்று வருடம் கழித்து) ஷவ்வால் மாதத்தில் தான். (இந்த மாதத்தில் தீங்குள்ளதாக நம்புகிறீர்களே) நபி(ஸல்) அவர்கள் அவரது ஏனைய மனைவியரை விட என்னோடு பிரியமாகாத் தானே இருந்தார்கள்" எனக் கூறினார்கள்.

எனவே நாட்களிலோ மாதங்களிலோ நல்லது கெட்டது என்ற பேதமில்லை. வெள்ளிக் கிழமை, ரமழான் மாதம், யுத்தம் செய்யத் தடுக்கப்பட்ட நான்கு மாதங்கள் என்பவற்றின் சிறப்புக்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பது உண்மையே எனினும் அந்த மாதங்களில் எதையேனும் செய்தால் வெற்றியளிக்கும் என்ற கருத்தில் அவ்வறிவுப்புக்கள் கூறப்படவில்லை. என்பதைப் புரிந்து கொள்தல் அவசியமாகும்.

நாட்களினாலோ நேரங்களினாலோ நல்லதுப் கெட்டதும் வரும் என நம்புவது இறை நம்பிக்கையில் உறுதியின்மையை ஏற்படுத்தும். எனவே சகுனம், பால் என்ற மூட நம்பிக்கையை விடடு விட்டு தவக்குலுடன் எமது பணிகளை எந்நேரத்திலும் நாம் ஆரம்பித்து விடலாம் இதில் அர்த்தமற்ற நம்பிக்கைகளுக்கு நாம் இடமளிக்க வேண்டியதில்லை.

எல்லாம் வல்ல அல்லாஹ் சகல விதமான மூட நம்பிக்கைகளிலிருந்தும் எம்மையும் எம் சமூகத்தையும் பாதுகாப்பானாக.

**ஆமீன்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்துவிட்டீர்களா?

- தற்பெருமை வேண்டாம் - 8.00
- ஷீயாக்களின் சீர் கேடுகள் - 15.00
- பெண் இனத்தின் முன்மாதிரிகள்- 25.00

## புதிய வெளியீடுகள்

- தாயத்து ஈமானுக்கு ஆபத்து - 10.00
- பொறாமை வேண்டாம் - 15.00
- முஸ்லிம் சிறார்களுக்கு நபி(ஸல்) நவின்ற நற்கதைகள் - 30.00
- அல்லாஹ் எங்கும் உள்ளானா?- 25.00

### உண்மை உதயம் இஸ்லாமிய இதழ்

தனிப்பிரதி - 15.00
வருடச் சந்தா - 100.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org